பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 16 திங்கட்கிழமை 01.09.2025 கதிர் 295

## இனி இது ரகசியம் அல்ல!

இந்த மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் தொடங்குகின்றது. கடந்த சில வருடங்களைப் போலல்லாமல் இந்த ஆண்டு ☞2

## எரிபொருள்களின் விலை குறைப்பு

இலங்கைபெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின்படி நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில்எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதன்படி, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 283 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 12 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 313 ரூபாநிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒக்டேன் ☞2

## இன்று யாழ். வருகிறார் அரசுத் தலைவர் அநுர

அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார். அவர் இங்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகளைத்தொடக்கிவைக்கவுள்ளார். அரசுத் தலைவராகப் பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தியாவதை முன்னிட்டு தொடங்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுக்காகவே அவர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று காலை 8.30 மணிக்கு மயிலிட்டியில் மீன்பிடித் துறை முக அபிவிருத்திப் பணிகளைத் தொடக்கி வைப்பார். தொடர்ந்து, காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் கடவுச்சீட்டுபணிமனையைத்தொடக்கி வைப்பார். அங்கிருந்து, யாழ். ☞8

### லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில்

## அரச அதிகாரிகள் மூவர் யாழ்ப்பாணத்தில் கைது

லஞ்சம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சங்கானை மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து 20 லட்சம் ரூபாய் லஞ்சத்தை பெற்றபோது இவர்களைத் தாங்கள் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ☞8

# இன்று யாழ். வரும் அரச தலைவர் அநுர முழு காணிகளையும் விடுவிக்கவேண்டும்

### இந்து மா மன்றம் வலியுறுத்து

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரும் அரசுத்தலைவர் அநுரகுமாரவடக்கில்உள்ளபொது மக்களின் காணிகளை முழுமையாக விடுவிப்பதற்குத்துரிதநடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமின்றி சைவ சமயத் தவர்களின் வணக்க இடங்களையும்விடுவிக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் வலியுறுத்தியுள்ளார். அரசுத் தலைவர் அநுரகுமார இன்று யழ்ப்பாணம் வருகின்றமை தொடர்பில் செய்தியாளர்களிடம்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இதை வலியுறுத்தினார். ☞2

## 200ஐ கடந்தது செம்மணி பார்க்க வருவாரா அநுர?

### நேற்று மட்டும் 12 பேரின் எலும்புகள் மீட்பு





செம்மணி மனித புதைகுழிகளில் ஒன்றான அரியாலை, சிந்துப்பாத்தி இந்து மயானப் புதைகுழிகளில் இருந்து இதுவரையில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எலும்பு எச்சங்களின் எண்ணிக்கை நேற்று 200ஐக் கடந்தது. நேற்று மட்டும் 12 பேரின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செம்மணிமனிதபுதைகுழியின் ☞2

### ஜெனீவா கூட்டத் தொடருக்கு முன்பாக

## சிவில் அமைப்பினர்களுடன் அமைச்சர் ஹேரத் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது மீளாய்வுக் கூட்டத்தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி தொடங்குகிறது. இக்கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் பங்கேற்கவுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜெனீவா செல்ல முன்னர் உள்நாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள்மற்றும்இராஜதந்திரிகளை சந்திக்கவுள்ளார். வரும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில்இந்தசந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன.

புதன்கிழமை பன்னாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் இலங்கையில்மனிதஉரிமைகள் ☞2

## 2000 கெப்ரக வாகனங்களை உடன் இறக்குமதி செய்கிறது ஆளும்தரப்பு

2026ஆம்ஆண்டின்தொடக்கத்தில் அரச நிறுவனத் தலைவர்களுக்காக 2000கெப்ரகவாகனங்களைஇறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்ருவன்செனரத்தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அடிமட்ட அளவில் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தஇ ☞2 மாகாண அரச நிறுவனங்களின்

## ஊழலைத் தடுக்க அரச நிறுவனங்களில் உள்விவகாரப் பிரிவுகள் நிறுவவேண்டும்

### ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் வலியுறுத்து

இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்க அரச நிறுவனங்களுக்குள் உள் விவகாரப் பிரிவுகளை நிறுவுவதையும், ஊழல் எதிர்ப்பு இலக்குகளை முன்னேற்றுவதில் ஆளும்தரப்பும் சிவில் சமூகமும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ☞8

## சேனைப் பயிர்ச் செய்கையாளர்களின் பிரச்சினை விரைவில் நாடாளுமன்றில்

### சஜித் பிரேமதாச அறிவிப்பு

சேனைப் பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவோம் எனஎதிர்க்கட்சிதலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

மொனராகலைமாவட்டத்தில்உள்ள கொட்டியாகல99சந்திப்பகுதியில்நேற்று நடைபெற்றகொடியாகலவிவசாயிகளின் காணிப் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் ☞2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பாதாள உலகத் தலைவர்களும் தடுப்பு

ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்களுடன்தொடர்புடையதாகசந்தேகிக்கப்படும் கெஹல்பத்தரே பத்மே உள்ளிட்ட ஐந்து பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 72 மணிநேர தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக ☞8

காலைக்கதிர் Kalaikkathir

# பொலிஸ் நிலையம் அருகிலேயே நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

## வென்னப்புவவில் சம்பவம்: சந்தேகநபர் கைது

வென்னப்புவ பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நேற்றுக் (31) காலை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்காக பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கார் மற்றும் துப்பாக்கி என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வென்னப்புவ பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில்பயணித்தவர்களைஇலக்குவைத்து, காரில் சென்ற இனந்தெரியாதநபர்களால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காரில் சென்றவர்கள் முதலில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களைத் தமது காரால் மோதி விபத்துக்குள்ளாக்கியுள்ளனர். அதன் பின்னர், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்ளை கூரிய ஆயுதத்தினால் அவர்கள் தாக்கியுள்ளனர். இதனையடுத்து காயமடைந்தவர்களில் ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்றார் என்று தெரிவிக்கப்படுகிறது மற்றைய நபர் மீது காரில் பிரவேசித்த இனந்தெரியாதவர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மேல்நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கு ஒன்றிற்காக வழங்கப்பட்ட உத்தரவின்பேரில், வென்னப்புவ பொலிஸில் முன்னிலையாகி கையொப்பமிட சென்றவர் என்று தெரியவந்துள்ளது. கையொப்பமிட்டதன் பின்னர், அவரும் மற்றுமொருவரும் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியபோதே, குறித்த துப்பாக்கி சூடு இடம்பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## இனி இது .....

கூட்டத்தொடர் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுவதைப் போன்று தமிழ்க் கட்சிகளும் மீண்டும் சர்வதேசம்தான் எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு என்கிற சலித்துப்போன அரசியல் பாடத்தை மீண்டும் கையிலெடுத்துள்ளன. இந்த முயற்சி மிக நீண்ட, நெடிய பயணம் என்பதும் அதனால் மக்கள் எதிர்பார்க்கும் உடனடிச் சாத்தியமான எந்தவொரு தீர்வையும் பெற முடியாது என்று நன்கு தெரிந்திருந்தபோதும், வேறு எந்தவொரு அரசியல் விவகாரமும் தமிழ் அரசியல் கட்சிகளின் கைகளில் இல்லாத காரணத்தால் அவர்கள் மீண்டும் சர்வதேசத் தீர்வு என்கிற முருங்கை மரத்தில் ஏறியிருக்கிறார்கள். அதனால்தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கடிதங்கள், கையெழுத்துப் போராட்டங்கள் என்று பரபரக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் இந்த ஏமாற்று வேலை நடக்கிறது என்றால், தெற்கில் ஆளும்தரப்பு இந்தக் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக இருக்கின்றது. ஊழலுக்கு எதிராகவும் முன்னைய குற்றங்களுக்கு எதிராகவும் தற்போது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை முன்வைத்து இந்தக் கூட்டத் தொடரை எப்படிச் சமாளிப்பது என்பது தொடர்பில் அவர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். இதனடிப்படையில் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளை இந்த வாரம் சந்திக்கவுள்ளார். சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா) மனித உரிமைகள் ஆணையர் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் சட்டமா அதிபர் துறை குறித்து குறிப்பிடப்பட்ட குறிப்புகள் மீது தாம் கடும் அதிருப்தி கொண்டுள்ளார் என்று சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க ஐ.நாவிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை வதிவிட பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்சேவை அவர் கடந்த வாரம் சந்தித்தார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் உள்ளடக்கங்களை அவர் நிராகரித்தார், மேலும் சட்டமா அதிபர் துறை குறித்து அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கான முறையான பதில் ஏற்கனவே வெளியுறவு அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். அடுத்த வாரம் ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 60வது அமர்வுகளில் இலங்கையின் பதிலில் சட்டமா அதிபரின் கருத்துக்களும் சேர்க்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு சட்ட மா அதிபர் அலுவலகத்தில் தேவையான சீர்திருத்தங்கள் செய்யப்படாதிருப்பதும் ஒரு காரணம் என்று ஐ.நா. ஆணையரின் அறிக்கையின் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடுமையான மனித உரிமை மீறல்களைக் கையாள ஒரு சுயாதீனமான வழக்குத் தொடுநர் அதிகாரசபையின் அவசியத்தை அது வலியுறுத்தியது. மேலும், ஆளும்தரப்பு தனது கொள்கை அறிக்கையில், 'அத்தகைய சுயாதீனமான வழக்குத் தொடுநர் அலுவலகம்' ஒன்றை அறிமுகப்படுத்துவதாக உறுதியளித்துள்ளதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்ட பரந்த வழக்குரைஞர் விருப்புரிமை, உறுதிப்படுத்தப்படாத ஆதாரங்களின் அடிப்படையில் வழக்குகளைத் தொடரத் தயக்கம், காவல்துறையினரிடையே காணப்படும் குறைந்த புலனாய்வுத் திறன், தகுதிவாய்ந்த தடயவியல் நிபுணர்களின் பற்றாக்குறை மற்றும் தமிழ் பேசும் அதிகாரிகள் பற்றாக்குறை ஆகியவை பாதிக்கப்பட்டவர்கள் நீதியை அணுகுவதைத் தொடர்ந்து தடுக்கின்றன மற்றும் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் கலாசாரத்திற்குப் பங்களிக்கின்றன என்றும் அறிக்கை மேலும் குறிப்பிட்டது. ஆளும்தரப்பு ஏற்கனவே வழங்கியுள்ள வழக்குத் தொடுநர் அலுவலகம் குறித்த உறுதிமொழியை ஊக்குவிக்கும் வகையிலேயே ஐ.நா. ஆணையரின் அறிக்கையில் அது பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதாக ஐ.நா. தரப்பில் கூறப்படுகின்றது.

எது எப்படியிருந்தபோதும் இந்த அறிக்கைகளாலும் கடிதங்களாலும் உடனடியாகத் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் விடியலும் கிடைக்காது என்பது தெளிந்த உறுதி. தமிழ்க் கட்சிகளும் தமிழ் தரப்புக்களும் இங்கிருந்து கடிதங்கள் பலவற்றை அனுப்பி சர்வதேச விசாரணை என்ற பெயரில் நீதிக்கான சர்வதேச நீதிமன்ற (ICJ) விசாரணை, சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (ICC) விசாரணை, இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான தனியான பொறிமுறை (IIIM) என்று இருக்கின்ற எல்லா சர்வதேச விசாரணை முறைகளையும் கேட்டாலும், இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் அதுபற்றியெல்லாம் ஒரு வசனமும் இருக்காது என்றே நம்பகமாகத் தெரியவருகின்றது.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்து இன்னும் 15, 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏதாவது ஒரு நன்மையைத் தரக்கூடும் என்பதற்கு அப்பால் அவையெல்லாம் கிணற்றில் போட்ட கல் மட்டும்தான். இதற்குப் பதில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்குத் தடையாக இருக்கும் ரோம் ஒப்பந்தத்தில் கொழும்பு கையெழுத்திட வேண்டும் என்ற அழுத்தம் வேண்டுமானால் மிக அதிகபட்சமாக ஆணையரின் அறிக்கையில் காணப்படமுடியும். அந்த அழுத்தத்திற்குக்கூட இலங்கை அரசு அடிபணியும், அதனை ஏற்றுக்கொள்ளும் என்று எந்த உத்தரவாதமும் இல்லை. ஐ.நா. ஆணையரின் அறிக்கையில் இந்த விவகாரம் இடம்பெற்றால், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியன மனித உரிமைகள் என்ற பெயருக்கு அந்தக் கோரிக்கைகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் என்பதற்கப்பால் அதற்கொரு பெறுமானம் கிடைக்காது.

எனவே தமிழ்க் கட்சிகள் கடிதங்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் காரணமாக சர்வதேசமும் ஐ.நாவும் உடனடியாகவோ நீண்ட காலத்திலோ தீர்வைத் தரும் என்று ஒருபோதும் தமிழ் மக்கள் எதிர்பார்த்து ஏமாற்றமடையாதிருப்பதே நலம். ஒருவேளை அடுத்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தல் நடந்தால், தமிழ் கட்சிகளிடம் இவை தொடர்பில் தற்போது காணப்படும் ஆர்வமும் நமுத்துப்போகும் என்பதையும் கவனத்தில்கொள்க.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இன்று யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பல திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார் என அறிகின்றோம். அவரது வருகை ஆக்கபூர்வமாக அமைய வேண்டுமானால் நீண்ட காலப் போரினால் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரின் பயன்பாட்டில் அவர்களது ஆதிக்கத்தின் கீழ் உள்ளன. இத்தகைய காணிகள் பொது மக்களின் பயன்தரும் நிலங்களாகும். பல வளங்களைக் கொண்டவையாகும். அத்தகைய காணிகளை விடுவிப்பதன் மூலம் மக்கள் தமது அன்றாட தேவைகளை தாங்களே நிறைவேற்றிக்கொள்ளமுடியும். யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இருக்காது. எனவே இந்த மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது மட்டுமன்றி காங்கேசன்துறைக் கடற்கரையில் புராதன அடையாளமாக விளங்கிய சுக்கிரபாத திருகோண சக்கர சத்திரம் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் தல்செவன விருந்தினர் விடுதி அமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் காங்கேசன்துறை கீரிமலையில் அமைந்துள்ள சடையம்பாள் மடம் மற்றும் ஆதிசிவன் கோவில் இடித்து அழிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீளக் கட்டுவதற்கும், விடுவிக்கப்படாமல் உள்ள இந்து மக்களின் பல புராதன மடங்கள், ஆலயங்கள் விடுப்பதற்கும் யாழ் வரும் அரசுத் தலைவர் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றாக இந்த நிலங்கள் இருக்கின்றமையால் அரசுத் தலைவர் நல்லெண்ண செயற்பாடக இவற்றை விடுவிப்பதற்கு துரித நடவடிக்கைகளைத் தமது யாழ் வருகையின்போது எடுக்கவேண்டும் அரசுத் தலைவர் என்றார்.

## சேனைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

விவசாயிகள் தங்களது மானியங்களையோ அல்லது நிதி உதவியையோ கேட்கவில்லை, மாறாக பல தசாப்தங்களாக தாம் பயிரிட்டு வரும் நிலத்தின் மீதான உரிமையைத்தான் கேட்கின்றனர். இவர்கள் எதிர்நொண்டுவரும் இந்த பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரவேன்.

சோளம், தர்பூசணி மற்றும் வெண்டிக்காய் ஆகியவற்றை பயிரிடுகின்ற 5,000 முதல் 6,000 குடும்பங்கள், 25,000 ஏக்கரில் பல தசாப்தங்களாக பாரம்பரியமாக பயிரிட்டு வருகின்றனர். அவர்கள் தமது சேனைப் பயிர் செய்கையின் நிலத்துக்கான உரிமையைக் கோரி நிற்கின்றனர்.

இந்த விவசாயிகள் வாழும் உரிமை, வாழ்வாதாரம் மற்றும் விவசாயம் செய்யும் உரிமையைக் கோரி நின்ற போதிலும், இன்று அது பறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளை ஆளும் தரப்பு அமைச்சர்களிடம் கொண்டு வரப்படும்போது, அவர்கள் அபத்தமான பதில்களை வழங்குகின்றனர். இந்தப் பிரச்சினைகளை மாவட்ட அபிவிருத்திக் குழு மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு அமைச்சரவை அமைச்சர்கள் தெரிவித்து வருகின்றனர்.

தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து, அரசாங்கத்திற்கு சுமை கொடுக்காது சுதந்திரமான வாழ்க்கையை இம்மக்கள் முன்னெடுத்து வாழ்ந்தாலும், இன்று தீர்வுகளை வழங்காமையால் அவர்களை ஏழ்மை நிலைக்கு இந்த ஆளும்தரப்பு தள்ளி வருகின்றது.

எனவே விவசாயிகளின் இந்த உரிமையைப் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முன் நிற்கும். ஜனநாயக முறையில் இதற்காக முடிந்தவரை உரத்த குரலை எழுப்பும். என்றார்.

## சிவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் எதிர்கால திட்டமிடல்கள் தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத் தெளிவுபடுத்தவுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் ரூர்க்கினால் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை குறித்த புதிய அறிக்கை குறித்தும் இதன் போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது.

இம்முறை கூட்டத்தொடரில் கடந்தகால மனித உரிமை மீறல்கள் குறித்த பொறுப்புக்கூறல் விவகாரத்தில் ஆளும்தரப்பு மேலும் கால அவகாசத்தை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயராணையரின் அறிக்கையை ஆளும்தரப்பு நேரடியாக பேச்சு மூலம் எதிர்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளது. இ;ந்நிலையில் இந்த அறிக்கையானது இலங்கை இராணுவத்தின் மீது போர்க்குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக அமையும் என்று ஒரு சாரார் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் முன்னாள் அமைச்சரான ரியர் அத்மிரல் சரத் வீரசேகரவின் ஏற்பாட்டில் இதற்கெதிராக பொது மக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. உயராணையர் வோல்கர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் இலங்கையில் காணப்படும் மனித உரிமை நிலை, சட்ட நடைமுறைகள் மற்றும் அரசின் ஒத்துழைப்புகள் குறித்த மதிப்பீடு இடம்பெறவுள்ளதாகக் கூறப்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு கையெழுத்து சேரிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 200ஐ கடந்தது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் 07ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. இந்த அகழ்வுப் பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியிருந்த நிலையில், நேற்று 39ஆவது நாளாகவும் அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களையும் சேர்த்து இதுவரையில் 48 நாட்கள் அகழ்வு பணிகள் இடம்பெற்றுள்ளன. ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் 10 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று முற்றாக அகழ்ந்து அகற்றப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டன. இதுவரையில் 191 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இன்று யாழ்ப்பாணம் வரும் அரசுத் தலைவர் அநுரகுமார செம்மணிப் புதைகுழியையும் பார்வையிடலாம் என்று கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கான அனுமதி நேற்றுப்பிற்பகல்வரையில் நீதிமன்றத்திடம் பெறப்படவில்லை என்று இந்த வழக்கில் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார்.

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 299 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 341 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 185 ரூபாவாகவும் மாற்றமின்றி பேணப்படுகின்றது.

## 2000 கெப்ரக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் கிராமங்களுக்கு செல்வதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அதிகாரிகள் அங்கு சென்று திரும்புவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். எங்களுக்கு சில வாகனங்கள் தேவை.

நாட்டில் உள்ள ஒவ்வொரு அரச நிறுவனத் தலைவர்களுக்கும் அவர்களின் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் 2இ000 கெப்ரக வாகனங்களை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை செயல்படாத உள்ளூராட்சி நிறுவனங்களின் செயல்பாடுகளை மீண்டும் செயல்படுத்த பல புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களின் வறுமையை ஒழிக்க பல்வேறு திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மண்டைதீவு மைதானத்திற்கு அடிக்கல் நடுகையில் புதைகுழி மீதும் அநுர கவனம் செலுத்தவேண்டும்

மண்டைதீவு சர்வதேசகிரிக்கெட் மைதானத்திற்கு அடிக்கல் நாட்ட இன்று வரும் அரசுத் தலைவர் மண்டைதீவு மனிதப் புதைகுழி தொடர்பிலும் கரிசனை செலுத்தவேண்டும் என வேலணை பிரதேச சபை உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்டைதீவில் சர்வதேசதுடுப்பாட்ட மைதானத் திற்கு அடிக்கல் நாட்டுவதற்காக அரசுத் தலைவர் அநுரகுமார வருகிறார். அந்த இடத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குள்தான் மண்டைதீவு மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. மண்டைதீவில் இரண்டு மனிதப் புதைகுழிகள் உள்ளன. அவை அகழப்படப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என இந்த ஓகஸ்ட் 20 வேலணை பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 26 மண்டைதீவு மனிதபுதைகுழியின் 36ஆம் ஆண்டு நினைவு தினத்தை புதைகுழி உள்ள இடத் தில் நினைவுகூர்ந்து இருந்தோம். எனவே நமது தீர்மானத்தின்படி புதைகுழி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மண்டைதீவுக்கு வரும் அரசுத் தலைவர் அநுரகுமார, மண்டைதீவு மனிதப்புதைகுழிகள் தொடர்பிலும் கரிசனை செலுத்த வேண்டும்.

அரசுத்தலைவர் செம்மணி மனிதபுதைகுழியையும் பார்வையிடக்கூடும் என்று கடற்றொழில் அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதேபோன்று மண்டைதீவுக்கு வருகின்ற அரசுத் தலைவர் மண்டைதீவு மனிதப் புதைகுழியையும் பார்வையிடவேண்டும் என எதிர்பார்க்கிறோம். மண்டைதீவு மனிதப் புதைகுழி அகழ்வு பணிகளை விரைவில் ஆரம்பிக்கவும், நிதி ஒதுக்கீடுகளை செய்யவும், நீதியான விசாரணைகளை முன்னெடுக்கவும் அரசுத் தலைவர் ஒத்துழைக்கவேண்டும் - என்றார்.

# எனது கைகள் கட்டப்படவில்லை

## பொலிஸ் மா அதிபர் தானாக வாக்குமூலம்



நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கு அரசமைப்பின் ஊடாக எனக்கு முழுமையான அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனது கைகள் கட்டப்படவில்லை. அரசியல் தலையீடுகளுமில்லை. வழங்கிய பொறுப்பை முறையாக நிறைவேற்றுவேன். பொதுமக்கள் பொலிஸாருக்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

சட்டம் மற்றும் ஒழுங்கு, பாதாள குழுக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் தனியார் தொலைக்காட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பிரதான பொறுப்பு பொலிஸ் பிரிவுக்கு உண்டு. ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளை காட்டிலும் பொதுமக்கள் பொலிஸாருடன்தான் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள். ஆகவே பொலிஸார் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும்.

உலகளாவிய ரீதியில் பொலிஸ் சேவையில் காணப்படும் வசதிகளை இலங்கையின் பொலிஸ் சேவையில் அறிமுகப்படுத்தவேண்டும். பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பு பல ஆண்டுகாலமாக திருத்தம் செய்யப்படவில்லை. எதிர்வரும் காலங்களுக்கான ஆட்சேர்ப்புக்காக சட்டம் திருத்தம் செய்யப்படும்.

சட்டத்தரணிகளை பொலிஸ் சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தோர் பொலிஸ் பரிசோதகர் பதவிக்கும், பட்டதாரிகள் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கும் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசியல் தலையீடு ஏதுமில்லை. சட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்தவே ஆலோசனை வழங்கப்படுகிறது. எனது கைகள் கட்டப்படவில்லை. அரசமைப்பபின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைவாகவே செயற்படுவேன்.

சட்டம் மற்றும் ஒழுங்கை முறையாக செயற்படுத்த எடுக்கும் தீர்மானங்களை பொலிஸ் அதிகாரிகள் உட்பட உத்தியோகத்தர்கள் அனைவரும் முறையாக அமுல்படுத்த வேண்டும். முறையாக செயற்படாதவர்களுக்கு எதிராக சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# 3 சிறுமிகள் துஸ்பிரயோகம் அவர்களில் இருவர் கர்ப்பம்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிர்ச்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் 3 சிறுமிகள் மீது பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஒருவார காலத்துக்குள் தெரியவந்திருக்கின்றது. இதில் 13-17 வயதுகளுடைய இரு சிறுமிகள் கர்ப்பம் தரித் துள்ளனர் எனவும், இரு சிறுவர்களை கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டத்திலுள்ள ஒரு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் வாந்தியெடுத்த 17 வயதுச் சிறுமி ஒருவரை வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் 3 மாதக் கர்ப்பிணியாக இருக்கின்றமையை வைத்தியர்கள் கண்டறிந்தனர். இது தொடர்பாக பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டபோது, அந்தச் சிறுமியின் தாயும் தந்தையும் மீன் பிடித் தொழிலுக்காக கடற்கரைப் பகுதியில் மீன் வாடியில் இருந்து வருகின்றனர் எனவும், வீட்டில் சிறுமியும் அவரது சகோதரரும் தங்கியிருந்து வருகின்றனர் எனவும் தெரிய வந்தது.

3 மாதங்களிற்கு முன்னர் சம்பவதினம் சிறுமி வீட்டிற்கு இரவு வீதியால் நடந்து வரும்போது இருட்டில் வந்த ஒருவர் தன்னை இழுத்துச் சென்று பாலியல் வன்புணர்வு செய்தார் எனவும், அவரை அடையாளம் தெரியாது எனவும் பொலிஸ் விசாரணையின் போது சிறுமி தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அதே பொலிஸ் பிரிவில் 13 வயதுச் சிறுமி ஒருவரை 3 மாத கர்ப்பிணியாக்கிய 17 வயது சிறுவன் ஒருவனை பொலிஸார் கைது செய்ததனர். இதன்போது கைது செய்யப்பட்ட சிறுவன் நான் இதற்கு காரணம் அல்லன், தனது நண்பன்தான் இந்த சம்பவத் துக்குக் காரணம் எனவும் தெரிவித்த நிலையில், அந்தச் சிறுமியோ இல்லை இவன்தான் காரணம் என முறைப்பாட்டில் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சிறுவனை நீதிவான் மன்றில் முற்படுத்தி, 14 நாள்கள் தடுத்துவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த நிலையில் மாவட்டதிலுள்ள இன்னொரு பொலிஸ் நிலையப் பிரிவின் கீழ் உள்ள பிரதேசம் ஒன்றில் 15 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பிலும் 17 வயதுச் சிறுவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். சிறுவனை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# பிள்ளையார் சிலை குளத்தில் கரைப்பு

## சுற்றுச் சூழல் சீர்கேடு என கண்டனம்

விநாயகர் சதுர்த்திக்கு வணங்கிய பிள்ளையார் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று குளத்து நீரில் கரைக்கும் சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் சமய நிகழ்வு வவுனியாவில் இடம் பெற்றது. ஓகஸ்ட் 27 விநாயகர் சதுர்த்தி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் அதனை முன்னிட்டு நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மகாறம்பைக்குளம் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் வைக்கப்பட்டிருந்த விநாயகப் பெருமானின் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு குருமன்காடு காளி கோவிலில் விசேட பூஜை வழிபாட்டுக்காக வைக்கப்பட்டது. பின்னர், அங்கிருந்து பஜனையுடன் சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் மற்றும் குடியிருப்பு பிள்ளையார் ஆலயம் என்பவற்றுக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு ஏ9 வீதி ஊடாகச் சென்று தாண்டிக்குளம் குளத்தில் கரைக்கப்பட்டது. பக்தர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் இருக்கும் இந்த சமய வழிபாட்டு முறையை தேவையற்ற வகையில் இங்கும் கொண்டு வந்து சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தப்படுவதாகச் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கண்டிக்கின்றன. பல்வேறு தீங்கு விளைவிக்கும் வேதிப் பொருகளும் சேர்ந்த விநாயகத் சிலையினால் நீர்நிலைவாழ் உயிரினங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டும் அவர்கள், இதுபோன்ற தேவையற்ற சமயச் சடங்குகள் அறிமுகப்படுத்தப்படுவதைச் சமயப் பெரியோர்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர்.

# தேசிய விளையாட்டு விழா வரலாற்றில் முதல் தங்கத்தை வென்ற முல்லைத்தீவு

காலி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் 49 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வரலாற்றில் முதற் தடவையாக ஜெஸ்மிதா முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் தங்கப் பதக்கத்தை வென்று பெருமை சேர்த்துள்ளார்.

சனிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று இந்த வரலாற்றுச் சாதனையைப் புரிந்துள்ளார். கடந்த காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் கிடைத்தாலும் தங்கப் பதக்கம் கிடைப்பது இதுவே முதல் தடவையாகும்.

49ஆவது தேசிய விளையாட்டு விழாவானது காலி மாவட்டத்தில் ஓகஸ்ட் 29 தொடங்கி நேற்று நிறைவடைந்தது. குத்துச் சண்டைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த சசிகுமார் ஜெஸ்மிதாவுக்கும் அவரது வெற்றிக்குப் பக்கபலமாக இருந்த பயிற்றுவிப்பாளர் மற்றும் மாவட்ட பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசுத் தலைவர் வெறுமனே வந்து செல்லக்கூடாது

**இலங்கையின் அரசுத் தலைவர் அநுரகுமார, இன்று முதல் வடக்கிற்கான இரு நாள் பயணத்தை ஆரம்பிக்கிறார். யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாண மக்களுடன் நேரடியாக சந்திக்க வரும் இப்பயணம் ஆளும்தரப்பால் பெரிதாகப் பரப்புரை செய்யப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் அவர் வலியுறுத்திய வாக்குறுதிகள், குறிப்பாக மாகாண சபை அரசமைப்பில் உள்ளபடி செயற்பட இடமளிக்கப்படும் என்ற அவரது வாக்குறுதியும், வடக்கில் இன்னும் இராணுவ வசம் இருக்கும் காணிகள் மக்களுக்கு திருப்பி வழங்கப்படும் என்ற உறுதியும், இந்த வருகையின் முக்கியமான அச்சாணிகளாகத் திகழ்கின்றன.**

**வடக்கு மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று நில உரிமை. பல தசாப்தங்களாக போர் காரணமாக மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட காணிகள், இன்னும் பாதுகாப்பு தேவைகள் என்ற பெயரில் அரச படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்த நிலங்களின் காரணமாக, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்ப முடியாமல் தள்ளாடுகின்றனர்.**

**இன்று, இந்து மா மன்றத்தின் துணைத் தலைவர் ஆறு திருமுருகன், அரசுத் தலைவரின் வடக்கு வருகையை முன்னிட்டு, அனைத்துக்காணிகளையும்முழுமையாகவிடுவிக்கவேண்டும்என்று வலியுறுத்தியுள்ளார். இது ஒரு தனிப்பட்ட கோரிக்கையாக அல்ல; வடக்கு மக்களது பொதுவான கோரிக்கையாகும். காணிகளை விடுவிப்பது உண்மையான சமரசத்திற்கு அடியெடுத்து வைக்கும் நடவடிக்கையாகும்.**

**அநுரகுமார தேர்தல் காலங்களில் பலமுறை வலியுறுத்தியது, மாகாண சபைகள் அரசமைப்பின் ஒரு அங்கம் என்பதையும், அதனை புறக்கணிக்க முடியாது என்பதையும். இன்று மாகாண சபைகள் செயல்படாமல் காலம் கடந்து செல்கிறது. இதன் காரணமாக, பிராந்திய மக்களின் சுயாட்சி ஆவல் பூர்த்தி செய்யப்படவில்லை.**

**மாகாண சபைகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட வேண்டும். மக்களின் நலனுக்கான கல்வி, சுகாதாரம், வேளாண்மை, நில மேலாண்மை போன்ற பிரிவுகளில், அவர்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதிபரின் யாழ்ப்பாணப் பயணம், இந்த வாக்குறுதியின் நிறைவேற்றத் திட்டத்தைத் தெளிவுபடுத்தும் சந்தர்ப்பமாக அமைய வேண்டும்.**

**வடக்கின் மக்கள் இன்று ஆவலுடன் காத்திருப்பது வார்த்தைகளின் பயணம் அல்ல, செயல்களின் தொடக்கம் என்பதே. அவர்கள் எதிர்பார்ப்பது:**

**காணிகள் உடனடி விடுவிப்பு – மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பி வாழ இயல வேண்டும்.**

**மாகாண சபைகள் மீளமைவு – அரசமைப்பில் உள்ள காணி, காவல்துறை அதிகாரங்களுடன் மாகாண சபைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.**

**அரசுப் படையின் நிலமையைச் சீரமைத்தல்– அன்றாட குடிமக்கள் வாழ்வில் படையினரின் அதிகமான பங்கு குறைக்கப்பட வேண்டும்.**

**வளர்ச்சி திட்டங்கள் – வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், வேலைவாய்ப்புகள், கல்வி வாய்ப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு முன்னேற்றங்கள் செய்யப்பட வேண்டும்.**

**இலங்கையின் அரசியல் வரலாற்றில், தேர்தல் கால வாக்குறுதிகள் பலமுறை மறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அநுரகுமார வித்தியாசப்படவேண்டும். வடக்கு மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற, அவர் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும்.**

**யாழ்ப்பாணத்தில், கல்லறைகள், நினைவிடங்கள், காணாமல் போனோர் பற்றிய உண்மைத் தேடல்கள் போன்றவை இன்னும் முடியாத அத்தியாயங்களாக காத்திருக்கின்றன. அதிபரின் பயணம், இவற்றின் மீதும் கவனம் செலுத்தவேண்டும். மிக முக்கியமாக செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம். அங்கு நேரில் சென்று அரசுத் தலைவர் பார்வையிடுவார் என்று மக்கள் மத்தியில் கடும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.**

**இன்றைய யாழ்ப்பாணப் பயணம், அரசுத்தலைவரின் முகாமைத்துவ திறனை சோதிக்கும் முக்கியமான நிகழ்வாக மாறியுள்ளது. காணிகள் விடுவிப்பு, மாகாண சபைகள் மீளமைவு போன்றவை வெறும் அரசியல் கோரிக்கைகள் அல்ல – மக்களின் வாழ்க்கையையும் மரியாதையையும் மீட்டுத்தரும் அடிப்படை தேவைகள்.**

**அநுரகுமார, தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகளை உண்மையாக நிறைவேற்றி, வடக்கின் மக்களுக்கு நம்பிக்கையுடன் கூடிய எதிர்காலத்தை உருவாக்கும் தலைவராக தன்னை நிரூபிக்க வேண்டும். இல்லையேல், இந்த வருகை இன்னொரு வெற்று நிகழ்வாக வரலாற்றில் மறைந்து போகும்.**

## பயங்கரவாத் தடைச் சட்டம் நீங்கினால் குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம்

### எச்சரிக்கிறார் மூத்த சட்டத்தரணி

பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது என சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இந்த மாதத்தில் வரைவு செய்யப்படும் என இதுதொடர்பில் ஆராய்ந்து புதிய சட்டமூலம் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டுவர ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது. அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்து செய்யப்படும் அதே நேரத்தில், திட்டமிடப்பட்ட குற்றச் சட்டத்தையும் முன்னிலைக்கு கொண்டுவர வேண்டும்.

திட்டமிடப்பட்ட குற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் இந்தச் சட்டம் மிகவும் முக்கியமானது. அதனால் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும், அதேநேரம் திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்றார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்துச்செய்வது என்பது எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட விடயமாகும். அதனால் செப்டம்பர் தொடக்கத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்யும் வரைவை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வெள்ளை வானுக்கு பதில் இப்போது நீலப் பேருந்து

ஒரு காலத்தில் வெள்ளை வான்கள் மக்கள் மத்தியில் கடும் அச்சத்தை ஏற்படுத்தியதைப் போன்று இப்போது எதிர்க் கட்சிகளை அச்சுறுத்த நீல நிறப் பேருந்துகள் (சிறைச்சாலைக்குரியவை) ஆளும்தரப்பால் பயன்படுத்தப்படுகின்றன என்று பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

'நீல நிறப் பேருந்தைக் காண்பித்து இந்த ஆளும்தரப்பு ஆட்சியை முன்னெடுத்துச்செல்கிறது. ஆனால் அந்த நீல பேரூந்து ஒரு தரப்பினரை மாத்திரமே இலக்கு வைத்து பயணிக்கிறது. பொலிஸ், நீதித்துறை சுதந்திரத்தில் தலையிடாது இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்' என்றார் அவர்.

காலியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள உலகக் குழுக்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். அன்று நாடாளுமன்றத்தில் ஆலோசனை தெரிவுக்குழுக்களில் இதற்காக நாம் குரல் கொடுத்தோம். அப்போதைய கால கட்டத்தில் மாகந்துரே மதுஷ் போன்றோர் கைது செய்யப்பட்டனர். ஆனால் இவ்வாறு ஊடகப் பரப்புரைகள் மேற்கொள்ளப்படவில்லை. பாப்பரசர் நாட்டுக்கு வருகை தந்ததைப் போன்றே இவர்கள் நள்ளிரவில் நாட்டை வந்தடைந்தனர்.

பாதாள உலகக் குழுவினரை வீரர்கள் போல் அழைத்து வருகின்றனர். இது சமூகத்தை தவறாக வழிநடத்துவதாகும். பொலிஸ் மற்றும் அமைச்சர் ஒருமித்து பணியாற்ற முடியாது. பொலிஸ் ஆணைக்குழு என்பது சுயாதீனமானதாகும். அரசியலமைப்பில் சுயாதீனமாக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர், அமைச்சரொருவருடன் சென்று ஊடகத்தில் பிரசாரங்களை முன்னெடுப்பது சிறந்ததல்ல. இதே நிலைமை தொடர்ந்தால் பிரிதொரு சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபரையும் அமைச்சர் அழைக்கும் சூழல் ஏற்படும்.

அன்று கோட்டாபய ராஜபக்ச இவ்வாறு ஊடகப்பிரசாரங்களை முன்னெடுத்தபோது நாடாளுமன்றத்தில் நான் அதற்கெதிராக குரல் கொடுத்திருக்கின்றேன். அதுமாத்திரமின்றி அப்போது பாதாள உலகக் குழுவினரில் ஒரு தொகுதியினர் மாத்திரம் சுதந்திரமாக விடப்பட்டனர். இன்றும் அவ்வாறான சூழல் ஒன்று உருவாக்கப்படுகிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. சட்டத்தை நடைமுறைப்படுத்துவது சிறந்தது. ஆனால் அதனை அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்திக் கொள்வது உகந்ததல்ல.

நீலநிற பேரூந்தைக்காண்பித்து இந்த ஆளும்தரப்பு ஆட்சியை முன்னெடுத்துச் செல்கிறது. ஆனால் அந்த நீல பேரூந்து ஒரு தரப்பினரை மாத்திரமே இலக்கு வைத்து பயணிக்கிறது. பொலிஸ், நீதித்துறை சுதந்திரத்தில் தலையிடாது இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். பாதாள உலகக் குழுக்களுடன் எதிர்க்கட்சிகளுக்கு தொடர்பிருப்பதாக ஆளும்தரப்பு கூறியது. அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். ஆதாரம் இன்றி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அணுஆயுத விரிவாக்கத்தை நிறுத்திய கொர்பச்சேவ்; அமைதியின் முன்னோடி? சோவியத் உடைப்பின் சூத்தரதாரியா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

(உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் ஆகஸ்ட் 30, 2022 இல் காலமானார். ஆயினும் அவரைப் பற்றிய பார்வை பலவாக உள்ளன)

2000 வருடத்துக்குள் பூமியிலிருந்து அணு ஆயுதங்களை ஒழித்துவிட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மைக்கேல் கொர்பச்சேவ் கோரினார். அணுஆயுத விஸ்தரிப்பையும், ஆக்கிரமிப்பு இராணுவ ஆதிக்கத்தையும் ரஷ்யா நிறுத்திய போதிலும், நேட்டோவின் ஐரோப்பிய ஆக்கிரமிப்பு இன்னமும் தொடர்வது ஏன் என்பதே பலரின் கேள்விக்குறியாகும்.

உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் ஆகஸ்ட் 30, 2022 இல் காலமானார். ஆயினும் அவரைப் பற்றிய பார்வை பலவாக உள்ளன. உலக அமைதிக்காக அணுஆயுதத்தை குறைத்த முன்னோடி என்றும், சோவியத் உடைப்பின் சூத்தரதாரி என்றும் பல்வேறு கோணங்களில் அவர் பார்க்கப்படுகின்றார்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் தலைவரான மிகையில் கொர்பச்சேவ் மேற்குலக நாடுகளுடனான பதற்றத்தைக் குறைத்தவர் என்றும், அமெரிக்காவுக்கும் சோவியத்ஒன்றியத்துக்கும்இடையில்இருந்தபனிப்போர் 1980-களின் இறுதியில் முடிவுக்கு கொண்டு வந்தவரும் என்றும் மேற்குலக நாடுகளால் பாராட்டப்பட்டவர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் ஆகஸ்ட் 30, 2022 இல் காலமானார்.

கோர்பச்சேவை சோவியத்தின் சீர்திருத்தவாதி என்றும், புதிய அணுகுமுறையால் உலக அரசியல் அரங்கில் 1985 இல் நுழைந்த போது ஆரம்பத்தில் ரஷ்ய மக்களும் பெரும் நம்பிக்கை கொண்டு கோர்பச்சேவை வரவேற்றனர்.

## 1990-ல் அமைதிக்கான நோபல்பரிசு

அவரின் சீர்திருத்தங்கள் மீது சோவியத் மக்களும், கிரெம்ளினும்முதலில்புதிய கொள்கைகளைவரவேற்றனர்.

கோர்பச்சேவ் பதவி ஏற்றவுடன்மேற்கத்திய உலகும் பொதுவாக பாராட்டினர். கொர்பச்சேவ் அரசியல் பாணியால்மாஸ்கோ மாறலாம் என்றும், அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆதரவளித்தன.

இதனாலேயே 1990-ல் அமைதிக்கான நோபல் பரிசு கொர்பச்சேவுக்கு வழங்கப் பட்டது. எனினும், மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாக நடந்துகொண்டதாக ரஷ்யாவில் அவருக்குக் கண்டனக் கணைகளும் எழுந்ததும் உண்மையே.

அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ரொனால்டு ரீகனுடன் நான்கு உச்சி மாநாடுகளில் கலந்துகொண்டார் கொர்பச்சேவ். 1987-ல் நடந்த சந்திப்பின் போது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஒன்றில் இருவரும் கையெழுத்திட்டனர். அதன்படி, ஐரோப்பாவில் வைக்கப்பட்டிருந்த இரு நாடுகளின் ஏவுகணைகள் அகற்றப் பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980-களின் இறுதியில் முடிவுற்றது. அத்துடன் சோவியத் யூனியன் சிதறுண்டு பல நாடுகளாகப் பிரிந்ததும் அந்தக் காலகட்டத்தில்தான்.



## பனிப்போர் முடிவு ;

சோவியத் வீழ்ச்சி அடையும் கால கட்டத்திலேயே ஆப்கானிஸ்தானில்நிறுத்திவைக்கப்பட்டிருந்த சோவியத் துருப்புகள் 1988-ல் திரும்பப் பெறப்பட்டன. அதே போல அங்கோலாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த கியூபாவும், கம்போடியாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த வியட்நாமும் தங்கள் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் கொர்பச்சேவ் வலியுறுத்தினார்.

1989-ல் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷைச் சந்தித்த கொர்பச்சேவ், பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்தார். 1980-களின் இறுதியில் இரும்புத் திரை நாடுகள் என்று மேற்கத்திய நாடுகளால் கருதப்பட்ட செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகள் ஜனநாயகப் பாதைக்குச் செல்வதை அவர் தடுக்கவில்லை என்றும் புகழப்பட்டார்.



## பெரஸ்ட்ரோயிகா - கிளாஸ்நாத் ;

கொர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டுசீர்திருத்தங்களும்சோவியத் யூனியனின்பொருளாதார,அரசியல் வளர்சசிக்கு உந்துசக்தியாகும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் பிரச்சினைகளைத் தீர்த்ததா என்றால் இல்லை என்றே கூறலாம். இந்த சீர்திருத்தங்கள் பலனை உடனடியாகத் தரவில்லை. சோவியத் யூனியனின் ஒரு கட்சி ஆட்சியிலிருந்த அதிகார வர்க்கப் பொருளாதாரத்தைச் சந்தை பொருளாதாரம் திடீரென ஓரிரவில் மாற்றுவது இலகுவானதல்ல.

சந்தை பொருளாதாரம் முதிர்ச்சியடைய அதிக காலம் வேண்டும் என்பதால் அது வெற்றியடையவில்லை. அதனாலேயே கோர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களின் பலன்கள் தாமதமாகத்தான் வரும் என்பதால் அப்போது இருந்த பிரச்சினைகள் குறையவில்லை என்பதும் உண்மையே.

## சோவியத் ஒன்றிய வீழ்ச்சி :

சோவியத் நாட்டில் சிறந்த பொருளாதாரம் சாத்தியமாவது உலகின் பிற பகுதிகளுடன், குறிப்பாக அமெரிக்காவுடன் சிறந்த உறவுகளைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது என்று கோர்பச்சேவ் நம்பினார். அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், சோவியத் ஒன்றியத்தை அழிப்பதில் மும்முரமாக இருந்தார். மேலும் உலகெங்கிலும் இருந்த அமெரிக்க இராணுவக் கட்டமைப்பை விரிவு படுத்தினார். இருந்த போதிலும் கொர்பச்சேவ் ஆயுதப் போட்டியிலிருந்து வெளியேறுவதாக உறுதியளித்தார்.

கிழக்கு ஐரோப்பாவில் மாற்றங்கள் சோவியத் யூனியனையும் பாதிக்கத் துவங்கியது. கொர்பச்சேவின் சீர்திருத்த அணுகுமுறையால்

சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகளில் சுதந்திரத்திற்கான இயக்கம் தொடங்கியது.

1991 இல பால்டிக் நாடுகள் (எஸ்டோனியா, லிதுவேனியா மற்றும் லாட்வியா) ஒவ்வொன்றாக, மாஸ்கோவிலிருந்து பிரிந்து தங்கள் சுதந்திரத்தை அறிவித்தன. மாஸ்கோவில் ஆகஸ்ட் 18, 1991 அன்று, சோவியத் இராணுவத்தாலும் அரசாங்கத்திலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கோர்பச்சேவை வீட்டுக் காவலில் வைத்தனர். இதன்பின்

கொர்பச்சேவ் தலைமைபதவியை ராஜினாமா செய்வது தவிர்க்க முடியாமல் போனது. 1991 கிறிஸ்துமஸ் தினத்தன்று, அவர் தனது பதவியை விட்டு விலகினார்.



அப்போது அவர் ஆற்றிய உரையில், ”நாங்கள் இப்போது ஒரு புதிய உலகில் வாழ்கிறோம். பனிப்போர் மற்றும் ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நமது பொருளாதாரம், பொது அணுகுமுறைகள் மற்றும் ஒழுக்க நெறிகளை முடக்கிய நாட்டின் பைத்தியக்காரத்தனமான இராணுவமயமாக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே வலிமைமிக்க சோவியத் யூனியன் சிதைந்து வீழ்ந்தது.

மைக்கேல் கொர்பச்சேவ் சோவியத் உடைவின் பின் ‘சர்வதேச உறவுகளில் நாம் ஒரு சகாப்தத்தை விட்டு, மற்றொன்றுக்குள் பிரவேசிக்கிறோம், அது உறுதியான, நீடித்த சமாதானத்தின் காலப்பகுதியென நான் எண்ணுகிறேன்’ எனக்கூறினார்.

## அணு ஆயுத கட்டுப்பாடு ;

செர்னேபில் அணு உலை விபத்து ஏற்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு, ஏப்ரல் 1996-ல், மிக்கேல் கொர்பச்சேவ் கூறுகையில்“ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான பிள்ளைகள் இறக்கிறார்கள் என்ற காரியத்தை மனிதகுலம் இனி சகித்துக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாங்கள் தயாராய் இருக்கவே இல்லை. இந்த அவல நிகழ்ச்சி, மனிதகுலம் கண்டுபிடித்திருக்கும் ராட்சத சக்திகளை இதுவரை கட்டுப்படுத்த முடிவதில்லை என்ற உண்மையின் கொடூர நினைப்பூட்டுதலாய் இருந்ததாக அப்போதைய சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கொர்பச்சேவ் குறிப்பிட்டார்.

மே 1990இல் வாஷிங்டன் டி. சியில் நடைபெற்ற வல்லரசு மாநாடு ஒன்றின் போது, சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கொர்பச்சேவ் ஐரோப்பிய நாடுகளின் இரண்டு கூட்டணிகளும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்று யோசனையை தெரிவித்தார்.

நடுத்தர குறுகிய தூரம் செல்லும் தரை சார்ந்த ஏவுகணைகளை ஒழிப்பது சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் சோவியத் யூனியன் அதிபர் மிகேயல் கொர்பச்சேவும் அமெரிக்க ரோனால்டு ரீகனும் மாஸ்கோவில் கூடியபோது நிறைவேறியது.

2000 வருடத்துக்குள் பூமியிலிருந்து அணு ஆயுதங்களை ஒழித்துவிட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மைக்கேல் கொர்பச்சேவ் சொன்னார்.இதற்கான வழி அணு ஆயுதங்களற்ற, வன்முறையில்லா ஓர் உலகமாக முன்னேறிச் செல்வதில் இருக்கிறது என சோவியத் தலைவர் மிக்கேல் கார்பஷாவ் எழுதிய பெரஸ்ட்ரோய்க்கா (ஊளஷளவிமிஷலிஷ்வழி) நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் க்ளாஸ்நாஸ்ட் மற்றும் பெரஸ்ட்ராய்க்கா கோட்பாடுகளை செயலுக்குக் கொண்டுவருவதில் கொர்பச்சேவ்வுக்கு இருந்த ஆர்வமே, சோவியத் உடைவுக்கும், அவர் சோசலிச- கம்யூனிஸத்தை உலகில் அழிக்க அமெரிக்காவுடன் சேர்ந்து நோக்கம் கொண்டிருந்தார் என்றும் ரஷ்யாவில் இன்னமும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஆயினும் உலக அமைதிக்காக அணு ஆயுத குறைக்க முன்னோடியாக இருந்து, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார்.

# மாகாண சபை சட்டத்தை திருத்தி விரைவில் தேர்தலை நடத்துங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

ஆளும்தரப்பிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறது. எனவே மாகாணசபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாயின் இலகுவாக அதை செய்ய முடியும். விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆளும்தரப்பை வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் அடக்குமுறைகளுக்கு எதிராகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். அதற்கு சகலரதும் ஒத்துழைப்பினைப் பெற முயற்சிக்கின்றோம். மாறாக இது அனைவரையும் இணைத்துக் கொண்டு தேர்தலில் களமிறங்குவதற்கான பயணம் அல்ல. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளருக்கும் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. இதே போன்று பல்வேறு துறைகளிலும் ஆளும்தரப்பு அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறது.

இந்த அடக்குமுறைகளுக்கு ஆளும்தரப்பு பொலிஸாரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேயே முன்னாள் அரசுத் தலைவர் ரணிலின் வழக்கு விசாரணை தினத்தன்று வீதிகள் மூடப்பட்டு பொது மக்கள் நீதிமன்றத்துக்குச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது. இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராக சட்ட ரீதியாக நாம் மக்களுக்காக முன்னிற்போம். நீதிமன்றத்தை முன்னிலைப்படுத்தி பொலிஸார் அடக்குமுறைகளை பிரயோகிக்க முற்பட்டால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்கவையே நாம் சிறையிலடைத்தோம். அவ்வாறிருக்கையில் ஏனையோரைக் கைது செய்வது எமக்கு கடினமான விடயமல்ல என்பதைப் போலவே ஆளும்தரப்பின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. எதிர்க்கட்சிகளை மௌனமாக்குவதே ஆளும்தரப்பின் நோக்கமாகும். மாகாணசபைத் தேர்தலை நடத்துவது ஆளும்தரப்புக்கு உள்ள பெரும் சவாலாகும். பிரதேச சபைத் தேர்தலில் ஆளும்தரப்பு பல இலட்சம் வாக்குகளை இழந்துள்ளது. இந்த அச்சத்தில் மாகாணசபைத் தேர்தல் மேலும் காலம் தாழ்த்தப்படக்கூடும்.

இந்த ஆளும்தரப்பிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறது. எனவே மாகாணசபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாயின் இலகுவாக அதை செய்ய முடியும். எனவே விரைவில் மாகாணசபைத் தேர்தலைநடத்துவதற்குநடவடிக்கைஎடுக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம். கொள்கை ரீதியில் எம்மோடு இணையக் கூடிய அனைவரையும் இணைத்துக் கொண்டு பயணிக்க நாம் தயாராக உள்ளோம் என்றார்.

# திரவப்பால் நுகர்வினை ஊக்குவிக்க மாணவர்களிடையே விழிப்புணர்வு

(சக்திவேல்)



பாடசாலை மாணவர்களிடையேதிரவப்பால் நுகர்வினை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு வெள்ளிக்கிழமைமட்டக்களப்பு களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயத்தில்நடைபெற்றது.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் களுவாஞ்சிகுடியிலுள்ள அரச கால்நடை வைத்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வு இடம்பெற்றது.



பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் களுவாஞ்சிகுடி கால்நடை வைத்தியர், கல்நடை அபிவிருத்திப் போதனாசிரியர், பொதுச் சுகாதார பரிசோதகர், மற்றும் உத்தியோகஸ்த்தர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# இனிய பாரதியின் மேலும் இரு சகாக்கள் சிஐடியினரால் கைது

இனியபாரதியின் கல்முனையைச் சோந்த சகாவான டிலக்ஷன் கல்முனையில் வைத்து சனிக் கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அதேநேரம் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடமுயற்சித்த காரைதீவைச் சேர்ந்த இன்னொரு சகாவான வன்னியசிங்கம் பரமேஸ்வரன் கட்டுநாயக்கா விமான நிலையத்ததில் வைத்து இருவராங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2007-6-28 திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக படுகொலை செய்யப்பட்ட பிரதேசசபை தவிசாளரின் மனைவி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் ஒருங்கிணைப்பாளருமான புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோருக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் ஜூலை 6 2025 அன்று திருக்கோவிலில் வைத்து இனியபாரதியையும் அவரது சகாவான மட்டக்களப்பு, சந்திவெளியைச் சேர்ந்த சசிதரன் தவசீலன் என்பவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

திருக்கோவில் முன்னாள் பிரதேச சபை தவிசாளர் உதயகுமாரை 2007-6-28 அன்று வாளால் வெட்டிக் காயப்படுத்திய பின்னர் கைக்குண்டு வீசிப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் இவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

இனிய பாரதியின் சகாவான கல்முனையைச் சேர்ந்த டிலக்ஷன் என்பவரை சந்தேகத்தின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றுள்ளனர். அதேவேளை இனியபாதியின் இன்னெரு சகாவான வவுணதீவு பாவற்கொடிச்சேனையைச் சேர்ந்தவரும், காரைதீவில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தவருமான வன்னியசிங்கம் பரமேஸ்வரன் என்பவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம் சென்ற நிலையில் அங்கு வைத்து ஓகஸ்ட் 12 குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

JDr
JDR CARE HOME & MEDICALS

முத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு

FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care

BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கீழ் இயங்கும் குற்றப்புலனாய்வு திணைகள அதிகாரிகளால் இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சனிக்கிழமை மாதகல் பகுதியில் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்கு மதுவரித்திணைக்கள அதிகாரிகள் முயற்சித்துள்ளனர். இந்தக் கைதை நிறுத்த லஞ்சம் தருவதாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார். 30 லட்சம் ரூபா லஞ்சம் தந்தால் விடுவிப்பதாக அதிகாரிகள் பேரம் பேசியுள்ளனர். 20 லட்சம் ரூபா லஞ்சம் வழங்குவதற்கு சந்தேகநபர் ஒத்துக் கொண்டுள்ளார். பணத்தை சித்தங்கேணியிலுள்ள அலுவலகத்திற்கு எடுத்து வருமாறு அதிகாரிகள் கூறியுள்ளனர். பணத்தை எடுத்துச் செல்வதற்கு முன்பாக அதிகாரிகள் லஞ்சம் கோரும் விடயத்தை பொலிஸாரிடம் தெரியப்படுத்தியுள்ளார் சந்தேகநபர். இதனடிப்படையில் அவர் லஞ்சப் பணத்தை அதிகாரிகளிடம் கையளித்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது நூலகத்துக்கும் அவர் செல்வார்.

இதன்பின்னர், மதியம் 1.30 மணியளவில் மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதான நிர்மாணப் பணிகளைத் தொடக்கி வைப்பார். அத்துடன், வேறு சில நிகழ்வுகளிலும் சந்திப்புக்களிலும் ஈடுபடும் அரசுத் தலைவர், நாளை முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்று அங்கு வட்டுவாகல் பாலத்தின் சீரமைப்புப் பணியைத் தொடக்கி வைப்பார். அத்துடன், தென்னை முக்கோண வலயப் பணிகளையும் அவர் ஆரம்பித்து வைப்பார்.

## பயங்கரவாதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளும் இரண்டு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலும் மேற்கு மாகாண வடக்கு குற்றப் பிரிவிலும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 72 மணி நேர தடுப்பு காவல் உத்தரவின் கீழ் அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி இந்தோனேசியாவில் கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட 5 பேர் அந்த நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களை பாதுகாப்புக்கு மத்தியில் இலங்கை பொலிஸார் பொறுப்பேற்று நேற்று முன்தினம் இரவு (30) இலங்கைக்கு விமானம் ஊடாக அழைத்துவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊழலைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் தலைவர் பிரான்சுவா வெலரியன் இலங்கையின் ஊழல் எதிர்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிக்க டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் உறுதிபூண்டுள்ளது என்றும் உறுதியளித்துள்ளார்.

கொழும்புக்கு வருகை தந்துள்ள டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் தலைவர் பிரான்சுவா வெலரியன் மற்றும் அரசுத் தலைவர் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு அரசுத் தலைவர் அலுவலகத்தில் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

அரச மற்றும் தனியார் துறைகளில் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான ஆளும்தரப்பின் தொடர்ச்சியான முயற்சிகளை பிரான்சுவா வெலரியனுக்கு விளக்கிய அரசுத் தலைவரின் செயலாளர், ஊழல் எதிர்ப்பு இயந்திரத்தை வலுப்படுத்த ஆளும்தரப்பு பல புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளது என்றும் அவை ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல், அரச நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் நாட்டில் சிறந்த கலாசாரத்தை உருவாக்குதல் ஆகிய பரந்த நோக்கங்களுடன் லஞ்சம் மற்றும் ஊழல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அரசுத் தலைவர் செயலாளர் கூறினார்.

இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்க அரச நிறுவனங்களுக்குள் உள் விவகாரப் பிரிவுகளை நிறுவுவதையும், கிளீன் ரீலங்கா திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளையும் பாராட்டிய டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனலின் தலைவர், ஊழல் எதிர்ப்பு இலக்குகளை முன்னேற்றுவதில் ஆளும்தரப்பும் சிவில் சமூகமும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இலங்கையின் ஊழல் எதிர்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிக்க டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் உறுதிபூண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2025இல் வெளியிடப்பெற்றது